செய்தி வெளியீடு எண்.82 நாள்.24.07.2021

# பத்திரிக்கை செய்தி

மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் மாற்றுத்திறனாளிகளுக்கான மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடத்திட வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. மேலும் கொரோனா நோய் தொற்று பரவலை குறைக்க பொது மக்கள் கலந்து கொள்ளும் சமுதாயம் சார்ந்த கூட்டங்கள் நடத்த அரசு தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே சென்னை மாவட்டத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில், 30.07.2021 வரை தங்களின் கோரிக்கை மனுக்களை https://chennai.nic.in என்ற இணையதளத்தில் District Collector Chennai - Special Grievance Petitions for Differently Abled என்ற இணையதள பக்கத்தில் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பதிவேற்றம் செய்யப்பட்ட விண்ணப்பங்களை பரிசீலினை செய்து, அதனை பகுதி பகுதியாக பிரித்து, அரசின் கொரோனா நோய் தொற்று பரவல் வழிமுறைகளை வழுவாது பின்பற்றி, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர் என்றும், நேர்காணல் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ. விஜயா ராணி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**வெளியீடு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**
**சென்னை-01**